நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 30.07.2021

2021ம் ஆண்டு ஜீலை மாதம் 30.07.2021ம் தேதி வெள்ளி கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதராண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.தி.சகிலா, B.Com.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீலை 2021ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். /2020/சி1)
**தீர்மான எண் : 129** பதிவு செய்யப்படுகிறது.

2) இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் ஜீன் 2021ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். /2020/சி1)
**தீர்மான எண் : 130** பதிவு செய்யப்படுகிறது.

3) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகன எண். TN-60 AW-0522-ன் தகுதி சான்று முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள கீழ்காணும் பழுதுப் பணிகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து 17.05.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணி விபரம் | பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ் , பெரியகுளம். | KMA மோட்டார்ஸ், திண்டுக்கல் | ஸ்ரீ பாலாஜி மொபைல்ஸ்,மதுரை |
|---|---|---|---|---|
| 1 | கூடுதல் கட்லீப் பொருத்தல் | ரூ.6400/– | ரூ.8300/– | ரூ.7600/– |
| 2 | இழுக்கும் திறன் குறைவாக உள்ளது | ரூ5700/– | ரூ.9500/– | ரூ.8300/– |
| 3 | ஆயில் சர்விஸ் பார்கக | ரூ.7100/– | ரூ.9100/– | ரூ.8600/– |
| 4 | வாகனம் முழுவதும் பெயிண்ட் அடிக்க | ரூ.8000/– | ரூ.11500/– | ரூ.10500/– |
| 5 | நான்கு வீல்களிலும் கிரீஸ் பேக் பண்ண | ரூ.6000/– | ரூ.11000/– | ரூ.9000/– |
| 6 | பிரேக் செக்கப் பார்க்க | ரூ.2100/– | ரூ.5200/– | ரூ.4000/– |
| 7 | டிங்கர் ஒர்க் பார்க்க | ரூ.7000/– | ரூ.10500/– | ரூ.9000/– |
| 8 | வேக கட்டுபாடு கருவி பொருத்த | ரூ.7800/– | ரூ.9600/– | ரூ.9000/– |
| 9 | நான்கு டயர் புதியது மாற்ற | ரூ.12800/– | ரூ.14500/– | ரூ.14000/– |
| | மொத்தம் | ரூ.62900/– +GST–11322/– | ரூ.89200/– | ரூ.80000/– |
| | நிகர மொத்தம் | **ரூ.74,222/–** | **ரூ.89,200/–** | **ரூ.80,000/–** |

**அலுவலகக்குறிப்பு:** மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய PANDIAN AUTO MOBILES, பெரியகுளம், நிறுவனத்திற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6015/2021/எச்2

**தீர்மான எண் : 131** அனுமதி அளிக்கப்படுகிறது

4)இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகன எண். TN–60 AW–6019–ன் தகுதி சான்று முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள கீழ்காணும் பழுதுப் பணிகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து 17.05.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ் , பெரியகுளம். | KMA மோட்டார்ஸ், திண்டுக்கல் | ஸ்ரீ பாலாஜி மொபைல்ஸ், மதுரை |
|---|---|---|---|---|
| 1 | கம்ளிட் டிங்கரிங் வேலை | ரூ.7000/- | ரூ.10500/– | ரூ.9000/– |
| 2 | ஆயில் சர்வீஸ் | ரூ7100/- | ரூ.9500/– | ரூ.8500/– |
| 3 | கூதல் ஸ்பிரிங் பிளேட் | ரூ.6400/- | ரூ.11000/– | ரூ.9000/– |
| 4 | பெயிண்ட்டிங் வேலை | ரூ.8000/- | ரூ.13000/– | ரூ.11000/– |
| 5 | டைனமோ செல்ப்மோட்டர் எலக்ட்ரிக் ஒர்க் | ரூ.5400/- | ரூ.8000/– | ரூ.7000/– |
| 6 | நான்கு வீல்களிலும் கிரீஸ் பேக் பண்ண | ரூ.6000/- | ரூ.9000/– | ரூ.8000/– |
| 7 | வேக கட்டுபாடு கருவி பொருத்த வேண்டும் | ரூ.7800/- | ரூ.9800/– | ரூ.9400/– |
| 8 | பேட்டரி புதிதாக பொருத்த வேண்டும் | ரூ.5600/- | ரூ.7300/– | ரூ.6500/– |
| | மொத்தம் | ரூ.53300/– +GST-9594/- | ரூ.77800/– | ரூ.68400/– |
| | நிகர மொத்தம் | **ரூ.62,894/–** | **ரூ.77,800/–** | **ரூ.68,400/–** |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய PANDIAN AUTO MOBILES, பெரியகுளம், நிறுவனத்திற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6014/2021/எச்2

**தீர்மான எண் : 132** அனுமதி அளிக்கப்படுகிறது

5)இந்நகராட்சி வரிவசூல் மையத்தில் இணைக்கப்பட்டு இருக்கும் இணையம் "UTIS Leased Line Connectivity" க்கு 01.04.2020 முதல் 31.12.2020 வரை உள்ள உபயோக கட்டணமாக ரூ.1,79,454/– செலுத்தக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2020/WB, நாள்.24.03.2021ல் செலுத்த கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.1,79,454/– Accounts Officer M/s.BSNL Tamilnadu Circle" அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1654/2018/பி2

**தீர்மான எண் : 133** அனுமதி அளிக்கப்படுகிறது

**6)**போடிநாயக்கனூர் ஊராட்சி தற்போது இயங்கி வரும் அலுவலகம் பழுதடைந்து உள்ளதாலும், புதியதாக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டப்பட உள்ளதாலும், புதிய கட்டிடம் கட்டி முடிக்கும் வரை இந்நகராட்சி அலுவலகத்தில் ஒரு பகுதியை ஊராட்சி ஒன்றிய அலுவலகமாக பயன்படுத்து வகையில் ஒதுக்கீடு செய்ய கோரியுள்ளார்கள். மேற்படி இந்நகராட்சி பழைய நகர்மன்ற கட்ட கட்டிடம் முதல் தளம் (2806 ச.அடி)இ.சேவை மைய முதல் தள கட்டிடம் (900 ச.அடி) வாடகைக்கு விட தயாரான நிலையில் உள்ளதாகவும் பொது பணித்துறையினர் நிர்ணயிக்கும் வாடகைக்கு ஒப்புதல் தெரிவிக்கும் பட்சத்தில் தேவையான அளவு கட்டிடம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று மாத வாடகைக்கு ஒப்புதல் செய்யப்படும் என்பதனை ஆணையாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், போடிநாயக்கனூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3596/2020/அ3, நாள்.05.07.2021ம் தேதியில் சம்மத கடிதம் அளித்துள்ளார். மேற்படி நகராட்சி பழைய நகர் மன்ற கூட கட்டிடத்தின முதல் தளம் மற்றும் இ–சேவை மைய கட்டிடத்தில் முதல் தளத்தையும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மாத வாடகையின் ஒதுக்கீடு செய்ய பொதுப்பணித்துறை அலுவலகத்தில் மாத வாடகை நிர்ணயம் செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று வாடகை தொகையினை நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

ந.க.எண். 954/2021/அ2
**தீர்மான எண் : 134** ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**7)**போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு கொரோனா விழிப்புணர்வு கொரோனா விழிப்புணர்வு தொடர்பான அறிவிப்பு அடங்கிய விளம்பரத்தினை மாலைமுரசு தினசரி நாளிதழில் 14.07.2021ம் தேதி விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணமாக மாலைமுரசு, மதுரை நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.10,500/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 956/2020/எச்1
**தீர்மான எண் : 135** அனுமதி அளிக்கப்படுகிறது

**8)**தமிழ்நாடு பொதுசுகாதார சட்டம் 1939 பிரிவு 76(2)ன் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோய் சமூக பரவலாக பரவாமல் தடுக்கும் வகையில் தனிமைப்படுத்தப்படும் நடவடிக்கைகளையும் செயல்களுக்கும் முககவசம் அணியாதவர்கள் பொது இடங்களில் எச்சில் துப்புபவர்கள் பொது இடங்களில் சமூக இடைவெளியை கடை பிடிக்காதவர்கள் மற்றும் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடை பிடிக்காமல் மீறி செயல்படும் நபர்களுக்கு முறையே இனவாரியாக நிர்ணயம் செய்த அபராத தொகை வசூலிக்கப்படும் என்ற அறிவிப்பு அடங்கிய விளம்பரத்தினை கிங்மேக்கர் ஜீலை மாத இதழில் விளம்பரம் செய்தகைக்கு விளம்பர கட்டணமாக கிங்மேக்கர் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.9,800/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 956/2020/எச்1
**தீர்மான எண் : 136** அனுமதி அளிக்கப்படுகிறது

9)போடிநாயக்கனூர் நகராட்சியில் 15–வது மாநில நிதிக்குழு 2020–2021 பரிந்துரையின் பேரிலான மானியத் திட்டத்தின் கீழ் (Tied Grant) முதல் மற்றும் இரண்டாம் உத்தேச மானியத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020ம் நாளிட்ட ந.க.எண்.20452/2020/LA3 கடிதத்தின் சுற்றறிக்கை வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கீழ்க்காணும் விபரப்படியான பணியினை தேர்வு செய்து ரூ.137.64 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.04, நாள்.12.01.2021ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், மதுரை அவர்களின் வழியாக கருத்து அனுப்பப்பட்டது.

| S.No | Name of work | Est.Cost (Rs.In Lakhs) |
|---|---|---|
| 1 | Supply and Erection of 30 TPD Centerlized Incinerator Plant with Infrastructures for Theni-Allinagaram, Bodinayakanur & Periyakulam Municipalities (Proportionate Cost for Bodinayakanur Municipality) | 137.64 |

இந்நிலையில் நிர்வாக காரணங்களால் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டு மேற்காணும் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் மாற்று பணிகளான குடிநீர் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்காணும் மதிப்பீட்டு தொகைக்கு கீழ்க்கண்ட விபரப்படியான பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதியும், வரிசை எண்.1 மற்றும் 3ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **S.No** | **Name of Work** | **Est.Cost (Rs.In Lakhs)** |
|---|---|---|
| **1** | Construction of Resource recovery shed at Mayanakarai rastha in Ward No.2 under solid waste management. | 50.00 |
| **2** | Purchase of two Plastic Shredding machine with 3T Capcity under solid waste management. | 9.00 |
| **3** | Purchase of five Baling machine with 60 Kg Capacity under solid waste management. | 33.75 |
| **4** | Construction of compound wall at Old compost yard existing bio mining site under solid waste. | 29.75 |
| **5** | Providing bore well and water supply arrangements at Ward No.33 and Ward No.1 in Bodinayakanur Municipality. | 4.20 |
| **6** | Construction of compound wall and paver block for Thendral nagar OHT under water supply. | 12.00 |
| **7** | Construction of compound wall and approch road for Dharmathupatti OHT under water supply | 30.00 |
| | **Total** | **168.70** |

**அலுவலகக் குறிப்பு:–** அ. வரிசை எண்.2,4,5,6,7 வரை குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. வரிசை எண்.1 மற்றும் 3 குறிப்பிட்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3340/2020/இ1)**

**தீர்மான எண் : 137** அனுமதி அளிக்கப்படுகிறது

**10)** இந்நகராட்சிக்கு சொந்தமான **11** எண்ணம் RICOH MP 2001L பிரிண்டர்களை ஆண்டு பராமரிப்பு முறையில் வருடாந்திர பணியை மேற்கொள்ள மேலும் பராமரிப்பு காலமான **20.07.2021** முதல் **19.07.2022** வரை மீண்டும் M/s.Stars Office Solution என்ற நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்யவும், பிரிண்டரின் பயன்பாட்டிற்கு தேவையான டோணர்கள் வழங்கவும், Consumable Parts மாதாந்திர பராமரிப்பு மேற்கொள்பவர்கள் மூலம் சரிசெய்யவும் மற்றும் ஒவ்வொரு மாதமும் நாம் பயன்படுத்தி எடுக்கும் பிரிண்டரின் எண்ணிக்கை தக்கவாறு பராமரிப்பு கட்டணம் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
**2.**மேலும் ஓராண்டு பராமரிப்பு பணியினை M/s.Stars Office Solution என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.527/2020/இ1)**
**தீர்மான எண் : 138** அனுமதி அளிக்கப்படுகிறது

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.